அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2024/2025

## தமிழ் - ஆண்டு 5

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

யாழன் முதல் தடவையாக வயலைப் பார்க்கச் சென்றான். அங்கே பலர் வேலை செய்து கொண்டிருந்தனர். யாழனது அப்பா வேலை செய்பவர்களுக்கு உணவு கொண்டு வந்தார். அவர் எல்லோரையும் உணவு உண்ண வரும்படி அழைத்தார். எல்லோரும் வந்து உணவு உண்டனர். ஒருவர் மட்டும் உண்ணாமல் கவலையுடன் இருந்தார். யாழன் அவருக்கு அருகில் சென்று ஏன் உண்ணாமல் இருக்கிறீர்கள் என்று கேட்டான். வீட்டில் பிள்ளைகள் பசியோடு இருப்பதாகக் கூறினார். உடனே யாழன் அப்பாவுக்கு இச்செய்தியைக் கூறினான். அப்பா அந்தப் பிள்ளைகளுக்கு உணவு கொடுத்துப் பசியைப் போக்கினார்.